# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**
**Editor**
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**
Vol. 30 March 2017 Issue - 3


ஆசிரியர் உரை

## இயேசுவானவர் காட்டிக் கொடுக்கப்பட்டதிலிருந்து...

இப்பூவலகில் வாழும் மனிதர்கள் சந்திக்கும் **பாதிப்புகள் அல்லது கேடுகள்** என்று சொல்லப்படுபவைகள் பல உண்டு. கொடிய நோய்கள், அகால மரணங்கள், பெரும் விபத்துக்கள், இயற்கைப் பேரழிவுகள் என்று அவைகளை நாம் பட்டியலிடலாம். இவைகளெல்லாம் மனுக்குலத்துக்குக் கடும் துயரத்தைக் கொடுக்கக்கூடியவைகள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆயினும், இவைகளையெல்லாம் அனாசயமாகப் பின்னுக்குத் தள்ளி, முண்டியடித்து முந்திக்கொண்டு முதலிடத்தைப் பிடிக்கக்கூடிய வேறொன்றும் உண்டு. அதுதான், **நம்பிக்கைத் துரோகம்**. இந்த நம்பிக்கைத் துரோகம் இவ்வளவு மோசமாகப் பார்க்கப்படுவதற்குக் காரணம், சம்பந்தப்பட்டவர்களால் இதைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பிருந்தும், பிறருடைய உணர்வுகளுக்குக் கிஞ்சித்தும் மதிப்பளிக்காமல், துணிந்து செயல்பட்டுப் பேரதிர்ச்சியை ஏற்படுத்துவது தான். இதில் வேடிக்கை என்னவென்றால், சம்பந்தப்பட்டவர்கள் நெடுங்காலமாக ஒருவரது நம்பிக்கைக்குரியவராகவும், நெருக்கமானவராகவும் இருந்தது தான். நம்பிக்கைத் துரோகம் தரும் வலி, வேதனை போன்றவைகளை அனுபவிக்கும் போதுதான் ஒருவரால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

சரி, **நம்பிக்கைத் துரோகம்** என்பதின் மறுபெயர்தான் **காட்டிக் கொடுத்தல்** என்பது. **காட்டிக்கொடுத்தல்** என்னும் இச்சொற்றொடர் நமது தமிழ் வேதாகமத்தில் இயேசுவின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தப் பட்டிருக்கிறது. **இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டார்** என்று (யோவான் 18 : 5). அப்படிக் காட்டிக்கொடுத்தவன் கூடவே இருந்த சீடன் யூதாஸ்.

இம்மாபாதகச் செயலை உலக வரலாற்றில் யாராலும் முறியடிக்கப் படமுடியாத சரித்திரச் சாதனையோடு இவன் நிறைவேற்றியிருக்கிறான். எப்படியெனில், பல நிலைகளில் துரோகம் செய்பவர்கள் உலகெங்கிலும் மலிந்து காணப்பட்டாலும், ஆதிகாலந்தொட்டு மனுக்குலத்தின் பாச முத்திரையாகவும், அன்பின் சின்னமாகவும், பூரிப்பின் வெளிப்பாடாகவும் பூலோகமெங்கும் வியாபித்து விளங்கும் **முத்தத்தின்** மூலமாக இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறான் இக்கயவன். ஞானத்தில் எப்படி சாலொமோன் ராஜாவுக்கு ஈடும் இணையும் எக்காலத்திலும் இல்லையோ, அதுபோல துரோகத்தில் இக்கயவனுக்கும் ஈடு இணை எக்காலத்திலும் இருக்க வாய்ப்பில்லை.

இந்த யூதாஸ் எவ்வளவு நெஞ்சழுத்தக்காரன் என்பதற்கு இன்னொரு உதாரணத்தையும் கொடுக்கிறேன் கவனியுங்களே! பரலோகத்தின் தேவனால் இப்பாழுலகிற்கு அனுப்பப்பட்டு, வந்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவோடு ஒரு மூன்றரை ஆண்டுகள் ஒட்டி இருந்து, சுற்றி நடந்து, உண்டு உறங்கி, கற்றுக் கேட்டு, அவருடைய நீதி, பரிசுத்தம், வல்லமை, தெய்வீகம் போன்றவைகளை அப்பட்டமாக உணர்ந்துகொள்ளும் அரிய பாக்கியத்தைப் பெற்றிருந்தும், இயேசுவின் ஊழிய நாட்களில் இவன் ஒருமுறை கூட இயேசுவை **ஆண்டவரே கர்த்தாவே** என்று அழைக்க வில்லை! அப்படியானால், இவன் இயேசுவோடு பேசினதே இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆம், பேசினான், மறுக்கவில்லை. ஆயினும், அப்படிப் பேசினபோதெல்லாம் அவன் **ரபீ**, அதாவது **போதகர்** என்று பொத்தாம் பொதுவில் குறிப்பிட்டானேயொழிய, அவருடைய தெய்வீகத்தை அங்கீகரித்து **ஆண்டவரே** என்று ஒருபோதும் இவன் அழைக்கவில்லை. இவ்வுண்மையை நீங்கள் எப்பொழுதாவது கவனித்திருக்கிறீர்களா?

இவன் பற்றி இதற்குமேல் பேசி, எழுதி நாம் நமது நேரத்தை வீணடிக்காமல் நம்முடைய ஆன்ம நன்மைக்கான காரியங்களுக்கு நமது சிந்தையைத் திருப்புவோம். சரியா?

பொதுவாக நமது பக்தி வாழ்வை மேம்படுத்துவதற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்குத் தான் முன்னுரிமை கொடுக்கிறோம். கண்டிப்பாக இதில் தவறேதும் இல்லை. இம்மூன்றும் சேர்ந்துதான் நற்செய்தி (1 கொரி 15 : 1 – 4). உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய கிறிஸ்துவின் நற்செய்திதான், ஒட்டுமொத்தக் கிறிஸ்தவத்தின் அச்சாணியாகவும் சொல்லப்போனால் கிறிஸ்தவத்தின் எல்லாமுமாக உள்ளது (1கொரி. 15 : 12 – 18).

ஆயினும், இயேசு ஆண்டவர் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிற நிகழ்வு களையும் நாம் குனிந்து கவனித்துத் தியானிக்கும் போது, அவைகளும்

நமக்குத் தேவையான சில பக்திப் பாடங்களைக் கற்றுக்கொடுத்து, வேதாகமத்தின் மகத்துவங்களைக் கண்டுகொள்ள உதவி செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட நிகழ்வுகளில் ஒன்றுதான் **இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட சம்பவம்.**

இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட நிகழ்வு கெத்செமனே என்னும் தோட்டத்தில் நடந்தது. இத்தோட்டமானது எருசலேம் நகருக்குக் கிழக்கே கீதரோன் பள்ளத்தாக்கிற்கு அப்புறத்தில், ஒலிவமலையின் அடிவாரத்தில் அமைந்திருந்தது. குறுகிய நிலப்பரப்புக் கொண்ட இத்தோட்டம், உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தால், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம், இது **முப்போகமும்** முழு விளைச்சல் தருவதால் அல்ல. மாறாக, இயேசுவின் வாழ்க்கையோடு இத்தோட்டத்திற்கு இருந்த சம்பந்தம்தான். குறிப்பாக, இதன் முக்கியத்துவத்திற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதல் காரணம், பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடுவதற்காக இயேசு அங்கு அடிக்கடி சென்றது (யோவான் 18 : 2). மற்றொன்று, இயேசுவின் சீடர்களில் ஒருவனாகிய யூதாசால் அவர் கட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டது ( மாற்கு 14 : 32 - 52).

சரி, உலகத்தை மீட்கும்படியாக வந்த இயேசு ஆண்டவர் இந்த கெத்சமனே தோட்டத்தில் முத்தக் கறையால் காட்டிக்கொடுக்கப்பட்ட சரித்திர நிகழ்வு மூலம் நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

**1. இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டது, தேவ ஞானத்தை வெளிப்படுத்துகிறது.**

வரலாற்றில் இடம்பிடித்த வஞ்சக முத்தத்தால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட சம்பவத்திலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம் தேவஞானம் பற்றியது.

தேவஞானம் பற்றிப் பேசுவதற்கு நமக்குப் போதுமான தகுதியும், அறிவும் இல்லையென்பது உண்மையாக இருந்தாலும், நமக்கிருக்கிற அறிவை வைத்து தேவ ஞானத்தைக் கண்டு வியக்காமலிருக்க முடியவில்லை. பழம்பெரும் பக்தனாகிய யோபு தேவ ஞானம் பற்றிய தனது புரிந்து கொள்ளுதலை இப்படியாகப் பதிவு செய்திருக்கிறார். **பூரண ஞானமுள்ளவர்** ( யோபு 37 : 16 ) என்று. தானியேல் **தீர்க்கன் ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது** ( தானி 2 : 20 ) என்று எழுதியுள்ளார். இன்னும், ஏசாயா தீர்க்கன் **தேவ ஞானமும் புத்தியும் ஆராய்ந்து அறிய முடியாதது** (ஏசாயா 40 : 28) என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்.

இப்படிப்பட்ட ஞானம் கொண்ட தேவனுடைய முன்னறிவின்படிதான் யூதாசின் காட்டிக்கொடுத்தலும் நடந்துள்ளது. எப்படியெனில், இயேசுவானவர் இப்பூமியில் அவதரிப்பதற்கு முன்பாகவே, தேவன் தமது ஞானத்தின்படியாகத் தமது வார்த்தைகளில் இதை வெளிப்படுத்தி விட்டார். ஆம், தாவீது தனது சங்கீதங்களில் ஒன்றான 41-ல் **என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும் என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்** (41:9) என்று முன்னுரைத்துள்ளார். இன்னும் சகரியா தீர்க்கன் .... **அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக் காசை நிறுத்தார்கள். கர்த்தர் என்னை நோக்கி; அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார். இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு; நான் அந்த முப்பது வெள்ளிக் காசை எடுத்து, அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்து விட்டேன்** (சகரியா 11:12,13). தேவ ஞானத்தின்படியான இவ்வார்த்தைகள் பின்னாளில் இயேசு காட்டிக்கொடுக்கப்படுவது பற்றியே பேசியுள்ளன.

இன்னும் தேவ குமாரனாகிய இயேசுவும் காட்டிக் கொடுத்தலை அறிந்தே இருந்தார். ஒரு சமயம் இயேசு தன்னுடைய சீடர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது, **மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார். ஆயினும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி ரபீ, நானோ? என்றான். அதற்கு அவர் : நீ சொன்னபடிதான் என்றார்** (மத். 26 : 24, 25). தன்னைக் காட்டிக் கொடுப்பவன் யார் என்பதை இயேசு ஆதிமுதல் அறிந்திருந்ததாக யோவான் நற்செய்தியாளன் கூறியுள்ளார் (யோவான் 6 : 64 ). அப்படிக் காட்டிக் கொடுப்பவனை பிசாசு என்று வெளிப்படையாகச் சாடி (யோவான் 6 : 70, 71), மற்ற சீடர்கள் இவ்வுண்மையை உணராதிருந்த நேரத்தில் இயேசு இதைப் பகிரங்கப்படுத்தினார்.

ஆக, இயேசுவானவர் காட்டிக்கொடுக்கப்படுவது, தேவனும், அவருடைய குமாரனும் அறியாத ஒன்றாக இருக்கவில்லை. அப்படியானால், யூதாசை எப்படிக் குற்றம் சொல்லமுடியும் என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய அறிவின்படி இந்தக் கேள்வியில் நியாயம் இல்லாமலில்லை. ஆயினும், வேத வசனங்கள் அவனைக் குற்றவாளியாகச் சொல்லுகிறபடியால், அவன் தன் பங்கில் தவறிழைத்திருக்கிறான் என்பதை ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். எப்படியெனில், வைத்தியனாகிய லூக்கா, **யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்** ( 22:3 ) என்று கூறுகிறார். ஆனால், யாக்கோபு ஆசிரியரோ, **எதிர்த்து நின்றால் பிசாசு ஓடிவிடுவான்** ( யாக் 4:7 ) என்று

எழுதியுள்ளார். அப்படியானால், இவன் எதிர்த்து நின்றிருந்தால் பிசாசுக்கு அங்கு வேலை இல்லை தானே. இதைத் தவிர்த்திருக்க முடியும் தானே!

தேவன் தன்னுடைய நோக்கங்களையும், திட்டங்களையும் எப்படி வேண்டுமானாலும் நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். எப்படியெனில், **அவரிடத்தில் பலமும், ஞானமும் உண்டு** (யோபு 12 : 16). மனிதனுடைய தயவு அவருக்குத் தேவையில்லை. ஆயினும், தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்ற பார்வோன், யூதாஸ் போன்ற மனக் கடினமுள்ள மனிதர்களையும் தேவன் பயன்படுத்துகிறார். அவ்வளவே! அதேவேளையில், ஏதேன் தோட்டம்தொட்டு, தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் முடிவெடுக்கும் சுதந்திரத்தில் தலையிடுவதில்லை. இதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

அருமையானவர்களே! இயேசு ஆண்டவரை யூதாசு காட்டிக் கொடுத்த சம்பவமானது, தேவ ஞானத்தை நமக்குப் பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்லுகிறது. அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாதவர்களாகிய நமக்கு, தேவனுடைய இந்த ஞானம் பிரமிப்பூட்டுகிறது. இப்படிப்பட்ட தேவனை நாம் தெய்வமாகக் கொண்டிருக்கிறபடியால் நாம் நம்முடைய செயல்பாடுகளில் உண்மையுள்ளவர்களாகவும், முடிவெடுப்பதில் நீதி யுள்ளவர்களாகவும் காணப்படுவது அவசியம். தேவன் கொடுத்திருக்கும் சுதந்திரத்தை நாம் இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக இருக்கக் கூடாது.

**2. இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டது, மனிதனின் முழுமையான பாவ நிலையைக் காட்டுகிறது.**

வரலாற்றில் இடம் பிடித்த வஞ்சக முத்தத்தால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட சம்பவத்திலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகிற இரண்டாம் பாடம், மனிதனின் பாவநிலை பற்றியது.

உலகின் காரியங்களை ஓரளவுக்காகிலும் அறிந்தவர்கள் நம்முடைய சமுதாய வாழ்க்கையில் பிரிக்க முடியாதவைகள் என்று சில உண்டு என்பதை நன்றாகப் புரிந்து வைத்திருப்பர். அவர்களின் அப்பட்டியலில், முதல் இடம் பிடிக்கத் தகுதியானது மனிதனும், பாவமும். ஆம், எல்லா மனிதரும் பாவிகள் என்று தான் வேதாகமம் கூறுகிறது (ரோமர் 6 : 23). இப்படிப் பாவத்தோடு பின்னிப் பிணைந்திருக்கும் மனிதன் தன் பாவ காரியங்களை நிறைவேற்றுவதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் தான் உண்டு. ஒன்று பகல் நேரம், மற்றொன்று இரவு வேளை. பகலில் பாவச் செயலில் ஈடுபடுவதைவிட இரவு வேளையில் ஈடுபடுவது சுலபமானது மறைவானது பாதுகாப்பானது என்று மனிதன் நினைப்பதால், தன் பாவ காரியங்களுக்குப் பெரும்பாலும் இரவு நேரத்தையே தெரிந்து கொள்ளுகிறான்.

கயவன் யூதாசும் இந்த நினைப்புக்கு விதிவிலக்காக இருக்கவில்லை. இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு அவன் இரவு நேரத்தைத் தான் தெரிந் திருக்கிறான். தன்னைப் பிடிக்க வந்தவர்களிடம் இயேசு என்ன கூறினார். பாருங்கள். **நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனே கூட இருக் கையில் நீங்கள் என்னைப் பிடிக்க கை நீட்டவில்லை. இதுவோ உங்க ளுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்** (லூக்கா 22 : 53). பகல் நேரத்தில் இயேசுவோடு பெருங்கூட்டம் எப் பொழுதும் இருந்ததால், இவர்கள் பகல் பொழுதைத் தெரிந்து கொள்ளாமல் இரவைத் தெரிந்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. பகல் நேரத்தில் அநேகர் கண்களில் மண்ணைத் தூவிக் காரியமாற்றுவது கடினம் என்று இவர்கள் கணக்குப் போட்டிருப்பார்களோ? பகலும் இரவும் தேவனுக்கு ஒன்றுதான் என்பது ஏனோ இப்புத்திசாலிகளுக்குப் புரியவில்லை. இவர்களுக்கு மட்டுமல்ல பாவக் காரியங்களில் ஈடுபட இரவைத் தெரிந்தெடுக்கும் அநேகருக்கும் இது புரிவதில்லை! என்ன செய்வது?

பாவச் செயல்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்க விரும்பும் ஒருவன் இரவுக்காகக் காத்திருக்கிறார்கள் என்றே வேதவசனம் கூறுகிறது. **விபசார னுடைய கண் மாலை மயங்குகிற வேளைக்குக் காத்திருந்து என்னை ஒரு கண்ணும் காணாது என்று முகத்தை மூடிக்கொள்ளுகிறான்** ( யோபு 24 : 15). புத்தியீன வாலிபர்கள் தங்கள் பாவச் செயல்களுக்கு மாலை மயங்கும் அஸ்தமன நேரத்தையும், இரவின் இருண்ட அதிகாரத்தையும் பயன் படுத்துகிறார்கள் என்று நீதிமொழிகளில் பார்க்கிறோம் (நீதி. 7: 7- 9). புதிய ஏற்பாட்டில் பவுலும்,பேதுருவும் இந்த இரவு வேளையின் ஆபத்தைத் தங்கள் எழுத்துக்களில் குறிப்பிடாமல் இல்லை. **தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள். வெறி கொள்ளுகிறவர்கள் இரத்திரியிலே வெறி கொள்ளுவார்கள்** (I தெச. 5 : 7), என்று பவுலும், **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்...** ( II பேதுரு 3. 10 ) என்று பேதுருவும் எழுதி, குடிவெறிக்கும் திருட்டுக்கும், இரவுக்கும் உள்ள கள்ள உறவை அம்பலப்படுத்தியுள்ளார்.

இருட்டை விரும்பிச் செயல்பட்ட இந்த யூதாசை வேதாகமம் இயேசு வின் சீடர்களில் ஒருவன் என்று ஏழுமுறை கூறுகிறது ( மத். 26 : 14, 15 ). இருப்பினும், இவன், **சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்** (நீதி. 17 : 17 ) என்னும் வார்த்தைகளைத் தன் செயலால் தவிடு பொடியாக்கிவிட் டான். ஆம், இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு யூதாஸ் தெரிந்து கொண்ட முறை முத்தம். அதற்காகப் பெற்றுக்கொண்ட சொற்பத் தொகை **30 வெள்ளிக் காசு.** மொத்தத்தில் அவன் நிலை, சீமோன் என்ற பணப்பேயைப் பற்றி வசனம் குறிப்பிட்டிருப்பது போல, **கசப்பான பிச்சிலும், பாவக்**

**கேட்டிலும் அகப்பட்டிருந்திருக்கிறது** ( அப். 8 : 23), சொல்லப்போனால், அதைவிடக் கேடாக இருந்துள்ளது அப்படித்தானே.

அன்பானவர்களே! நம்முடைய பக்தி வாழ்வின் நிலை எப்படியுள்ளது? இருளை விரும்புகிறவர்களாகவும், இருளை விரும்பிச் செயல்பட்ட யூதாஸ் போலும் இருக்கிறோமா? இருளும், துரோகமும், கேடும், பிச்சும், பண ஆசையும் ஏதோ யூதாஸ், சீமோன் போன்றவர்களுக்குரியது, எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லையென்று நினைப்போமானால் நாம் தவறு செய்கிறவர்களாகவே இருப்போம். யூதாஸ் போன்ற ஒரு சீடனுக்கும், நண்பனுக்கும், சீமோன் போன்ற ஒரு கிறிஸ்தவனுக்கும் இந்த நிலை ஏற்படமுடியுமானால் இக்கேடான நிலை நம்மையும் சீண்டிப் பார்க்காமல் இருக்காது. ஆகையால், கவனமாக நம் பக்தி வாழ்வை நடத்த நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

**3. இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டது, அவரின் தியாக அன்பை விவரிக்கிறது**

வரலாற்றில் இடம் பிடித்த வஞ்சக முத்தத்தால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட சம்பவத்திலிருந்து, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம் இயேசு ஆண்டவரின் தியாக அன்பு பற்றியது.

**தியாகம்** என்பது ஒரு மிகப்பெரிய வார்த்தை. நம்முடைய நாட்களில் இதன் பொருள் புரியாமல் அல்லது தெரியாமல் சர்வ சாதாரணமாக இவ் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஒன்றிற்காக அல்லது ஒருவருக்காக **ஒன்றை விட்டு விடுவது** அல்லது **அழித்துக் கொள்வது** என்பது தான் தியாகம் என்ற வார்த்தையின் மிக நெருக்கமான விளக்கம். அப்படிப் பார்க்கும்பொழுது, மெய்யான தியாகிகள் பரலோகத்தின் தேவனும், அவருடைய ஒரே பேறான குமாரன் இயேசுவும் தான். யோவான் 3:16 ம் வசனத்தின்படி, அநாதி காலந்தொட்டு தன்னோடிருந்த ஒரே பேறான குமாரனை,மனிதனுடைய நித்திய வாழ்வுக்காகத் தியாகம் செய்தார். அந்த தேவ குமாரனும் பரலோக வாசஸ்தலத்தைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனித சாயலாகி, பாழாய்ப்போன இப்பூமிக்கு வந்து, வாழ்ந்து, சிலுவையில் தன் உயிரை விட்டார் (பிலி. 2 : 6 - 8; எபே. 5 : 2). இதை விட மேலான தியாகத்தை உலக வரலாற்றில் யார் செய்திருக்கிறார்கள்?

இந்த தியாகச் சிந்தைதான் இயேசு ஆண்டவர் காட்டிச் கொடுக்கப்பட்ட நிலையிலும் அவருக்குள்ளாக இருந்திருக்கிறது. எப்படியெனில் ஒரு கடுங்குற்றவாளியைப் பிடிப்பது போல், இயேசுவைப் பிடிக்க வந்திருக்கிறார்கள். **யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும்**

**கூட்டிக்கொண்டு பந்தங்களோடும், தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான்** (யோவான் 18 : 3) என்றுள்ளது. இயேசு அங்கு நடக்கப்போவது என்ன என்பதைத் தெரிந்துகொண்டு **யாரைத் தேடுகிறீர்கள்** என்று கேட்டதோடு, **நான் தான்** என்றும் கூறி (18:4,5) நடக்க வேண்டியது நடக்கும்படி அனுமதித்தார்.

அங்கே பேதுரு மாம்ச சிந்தையோடு செயல்பட்டு, இயேசுவைத் தன் செயலால் பாதுகாத்து விடமுடியும் என்று எண்ணிச் செயல்பட்டபோது, **உன் பட்டயத்தைத் திரும்ப அதன் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்** (மத். 26 : 52) என்று அவனைக் கடிந்துகொண்டு தடுத்தார். அத்தோடு, **நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?** (24:53) என்று கேள்வி எழுப்பினார். தன் உயிருக்கே ஆபத்து வர நேர்ந்த சமயத்தில் கூட, தன்னுடையவர்களுக்காகச் செயல்பட்டுள்ளார்.

அன்பானவர்களே! நம்மை மீட்கும்படியாக இப்பூவலகிற்கு வந்த இயேசுவின் தியாகம் கொஞ்சமாகிலும் புரிகிறதா? இயேசு செய்த தியாகத்தின் உண்மைத் தன்மையைப் புரியாத ஒருவனால், கிறிஸ்தவ னுக்கான வாழ்க்கையை ஒருபோதும் வாழ முடியாது. இப்பேருண்மையின் அடிநாதத்தைப் பவுலடியார் கனகச்சிதமாகப் புரிந்துகொண்டபடியால்தான், **கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற் றையும் நஷ்டமாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்** (பிலி. 3 : 7, 8) என்று எவ்விதக் கூச்சமும், அச்சமுமின்றி பகிரங்கப்படுத்தினார்.

ஆயினும், இவைகளையெல்லாம் நாம் அறிந்திருந்தும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் **தியாகத்தை தியாகம் செய்தவர்களாக** வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதாவது, கிறிஸ்துவுக்காக எதையும் விட்டுவிட நாம் தயாராக இல்லை. கிறிஸ்துவும் வேண்டும், கிறிஸ்துவோடு சேர்ந்து பாரம் பரியம், சடங்காச்சாரம், பண்டிகைக் கொண்டாட்டம், சிறப்பு நாட்கள் என்று எல்லாம் வேண்டுமென்று அடம் பிடிக்கிறோம்.

நம்முடைய இந்நிலைப்பாடு, கிறிஸ்துவோடும், அவருடைய சிந்தையோடும், அவருடைய உபதேசத்தோடும் முரண்படுகிறதை உங்களால் ஏன் உணர முடியவில்லை? நீங்கள் உணராதிருக்கிறது எப்படி? என்று (மத்.16 : 11) தன்னுடைய சீடர்களைப் பார்த்து இயேசு கேட்டது போலல்லவா இன்றும் தொடர்கிறது. கண்டிப்பாக இந்நிலை மாற வேண்டும். கிறிஸ்துவின் சிலுவை வீணாகக் கூடாது. ஆகையால், கிறிஸ்துவின் தியாகத்தை மதித்து கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்போம்!

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென் !!

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!!*

# இருபதாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

**“ திருமறை தியானம் ” நேயர்கள் &**

**“ திருமறை ஆசான் ” வாசகர்கள் கருத்தரங்கம்**

இடம்: **YMCA வளாகம், ஏலகிரிமலை**

**( வேலூர் மாவட்டம் )**

**நாள் : மே மாதம் 1, 2, 3 - 2017 ( திங், செவ், புதன்).**

**சிறப்பம்சங்கள்**

- ✓ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறைகளிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- ✓ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ✓ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- ✓ பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- ✓ கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெட்பம்.
- ✓ வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- ✓ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- ✓ பெண்களுக்கு தனி இடவசதி.
- ✓ சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

## உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 500/ சிறியவர்கள் ரூ. 300/**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

✆. 04257 – 230030, 98427 – 30382, 99655 – 30385

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.
ஆகவே **M.O.** செய்து அவசியம் முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

# ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது?

Bro. J.C. சோட்

கிறிஸ்தவம் உலகெங்கிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கோடிக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் செல்வதால் அதன் எண்ணிக்கை தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவம் என்பது, கிறிஸ்துவை ஒரு மனிதன் என்றோ, மற்றுமொரு பரிசுத்தவான் என்றோ அல்லது இன்னொரு தீர்க்கதரிசி என்றோ விசுவாசிப்பதை அடிப்படையாகக் கொண்டிராமல், கிறிஸ்தவம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், உலகத்தின் பாவத்திற்காக மரித்தவரென்றும், என்றென்றும் ஜீவிக்கும்படியாக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவரென்றும் விசுவாசிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். பேதுருவும், அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள் ( மத். 16 : 16 – 18 ). பரலோகத்திலிருந்து தேவனும், கிறிஸ்துவை தம்முடைய குமாரன் என்று அறிவித்தார் (மத்தேயு 17 : 5).

இன்று உலகத்தில், ஓர் உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கும் ஒரே மார்க்கம் கிறிஸ்தவம் தான். மற்ற மார்க்கங்களின் தலைவர்கள் மரித்தார்கள். ஆனால், மறுபடியும் உயிர்த்தெழவில்லை. கிறிஸ்து தாம் உயிர்த்தெழப்போவதாகச் சொன்னார். அதைச் செய்தும் காட்டினார் (யோவான் 11 : 25; மத். 28 : 1 – 6 ). அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் அவர் ஒரு பொய்யனாகவோ, வஞ்சகனாகவோ இருந்திருப்பார். மேலும், அவர் உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்தவம் ஒரு போதும் வளர்ந்திருக்காது. ஆனால், இன்றும் கிறிஸ்தவம் வாழ்கிறது, சபை வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை வாழ்கிறது. இவைகள் எல்லாமே கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் நடக்கிறது.

கிறிஸ்தவம் மிகப் புகழ்பெற்ற மார்க்கமாயிருக்கிறது. மற்றெந்த மதம் அல்லது நம்பிக்கையை விட, நன்மைக்கேதுவாக இந்த உலகை மாற்றுவதற்கு அதிகமாகச் செய்திருக்கிறது; சர்வதேச நாள்காட்டிகள்

கிறிஸ்துவின் வாழ்க்கையையும், மரணத்தையும் அடிப்படையாக வைத்தே நாட்களைக் குறிக்கின்றன. கிறிஸ்துவின் ஒழுக்க ரீதியிலான போதனைகளை ஆதாரமாக வைத்தே தேசங்களின் சட்டங்கள் பிரதானமாக இயற்றப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான நாடுகள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை அங்கீகரிக்கின்றன, நிச்சயமாக, இது கிறிஸ்தவத்திலிருந்து வந்ததுதான்; அதாவது, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார், மற்றும் கர்த்தர் தம்மை நினைவு கூரும்படியாகவும், தேவனை ஆராதிக்கும்படியாகவும் வாரத்தின் முதல் நாளிலே கூடிவர வேண்டுமென்று கட்டளையிட்டதையும் அடிப்படையாக வைத்து அமைந்தது தான் (மத். 28:1-6; அப். 20:7).

மனிதனுக்குத் தெரிந்த மிக உயரிய ஒழுக்க நெறிகள் கடைபிடிக்கப்படுவதற்கு கிறிஸ்தவம் பாடுபடுகிறது. இது நேர்மையாயிருத்தல், ஒருவருடைய கடனைத் திரும்பச் செலுத்துதல், வேலைக்கேற்ற வருமானம், ஒருவரையொருவர் மதித்தல் போன்ற நெறிகளைப் போதிக்கிறது. கிறிஸ்தவம் ஒழுக்க ரீதியிலான உயர்ந்த வாழ்க்கையை ஆதரித்து, குடும்ப முறைகளைப் பாதுகாத்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண உறவின் பாங்கை வலியுறுத்தி, அதோடு மரணபரியந்தம் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டுமென்பதையும் எடுத்துரைக்கிறது. கிறிஸ்தவம் எல்லாவற்றிற்கும் தேவனை தலையாக அங்கீகரித்து, புருஷனை மனைவிக்குத் தலையாகவும் அங்கீகரித்து, அதேசமயம், பிள்ளைகளை கர்த்தருடைய வளர்ப்பிலும், எச்சரிப்பிலும் வளர்க்க ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியே பொறுப்புகள் இருக்கின்றன என்பதை கிறிஸ்தவம் அங்கீகரிக்கிறது.

கிறிஸ்தவம் என்பது ஒரு மார்க்கம். அதன் பொருள் தேவனுக்கும், மனிதனுக்கும் ஆற்றப்படும் சேவை. யாக்கோபு இவ்விதமாகச் சொன்னார். **திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது** என்று (யாக்கோபு 1:27). இங்கே திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரிப்பது என்பது வெறுமனே வெறும் வாயில் விசாரிப்பது என்று பொருள்படாமல், இப்படிப்பட்டவர்களின் தேவைகளைச் சந்திப்பதில் அக்கறை காட்டுவதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்தவரை மற்றவர்களுடைய தேவைகளை சந்திப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே தான் பவுல், **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறை வேற்றுங்கள்** என்று சொல்கிறார் (கலாத்தியர் 6:2).

கிறிஸ்தவத்தை பிரதிநிதத்துவப்படுத்துகிறவர்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் தேவன் தான் என்பதை விசுவாசிக்கிறார்கள் (ஆதியாகமம் 1: 1 ). தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மனிதர்கள் மத்தியில் வாசம் செய்வதற்காகவும், இந்த உலகத்தின் பாவத்திற்காக சிலுவையில் மரிப்ப தற்காகவும் அவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டவர் என்பதையும் விசு வாசிக்கிறார்கள். கிறிஸ்து இப்படிச் சொன்னார் **ஆகையால் நீங்கள் உங் கள், பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்** என்றார் ( யோவான் 8 : 24 ). பரிசுத்த ஆவியானவர் பல நூறு வருடங்களாக தேவனுடைய வார்த்தையை எழுதும்படி பரிசுத்த வான்களை ஏவினார் என்றும், வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியி னால் ஏவப்பட்டதென்றும், எனவே அது தேவனுடைய வார்த்தை என்றும் கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள் (II பேதுரு 1 : 21 ; தீமோ. 3 : 16, 17 ; மத். 24 : 35 ). கிறிஸ்து தம்முடைய ஒரே சபையை, ஏற்படுத்தினார் என்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். மத். 16 : 18 ; எபே. 4: 4 – 6, அப். 2 : 47). கிறிஸ் துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நாங்கள் விசுவா சிக்கிறோம், அந்த நற்செய்தி முழு உலகத்திற்கும் பிரசங்கிக்கப்பட வேண் டும். கிறிஸ்து சொன்னார், **பின்பு, அவர் அவர்களை நோக்கி ; நீங்கள் உலக மெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசு வாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசு வாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு 16 : 15, 16). கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர் களாகி, வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, கிறிஸ்துவுக்காக தினமும் வாழ வேண்டும் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம்.( மத். 7 : 21 ; 1பேதுரு 4 : 16 ; யோவான் 4 : 2 ; அப். 20 : 7 ; லூக். 9 : 23).

கிறிஸ்தவம், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லா விசுவாசிகளும் ஒற்றுமையாயிருப்பதையும் (I கொரி. 1 : 10), கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதையும் ஆதரிக்கிறது. பவுல் இவ்விதமாக எழுதினார், **நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவா சத்தினால் தேவனுடைய புத்திராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்** (கலாத்தியர் 3 : 26 – 28).

– தொடரும்

பெண்கள் பகுதி

# மணமுறிவை மனதிலும் நினைக்க வேண்டாம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**பொ**துவாகவே சினிமா, தொலைக்காட்சி போன்றவைகள் தேவனுடைய திட்டத்தை சீர் குலைக்க முயற்சிக்கும் சாத்தானின் வல்லமையான ஏவுகணைகள். அதிலும், மேலை நாட்டு சினிமாக்களும், தொலைக் காட்சிகளும் இந்த நாசவேலை யில் முன்னணியில் நிற்கின்றன. தேவனால் வரையறுக்கப்பட்ட திருமணத்தின் சீரிய நோக்கங் களை உடைத்து உருக்குலைத்து, கண்டதும் காதல், ஒத்துப் போகிற வரைக்கும் இல்லற வாழ்க்கை, முடியாவிட்டால் இருக்கவே இருக் கிறது விவாகரத்து என்ற இழி நிலைக்கு இளம் வட்டங்களை உசுப்பி விட்டுத் தாறுமாறான இல் லற சுகங்களை ஊக்குவிக்கின் றன. சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வது கோழைத் தனம் என்ற எண்ணம் விஷவாயு பரவுவது போலப் பரவி, இளைஞர் களின் உள்ளங்களைப் பாழ்படுத்தி வருகிறது. திருமணம் சம்பந் தப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள், தேவ ஆலோசனைளை மீறி போர்க்கொடி உயர்த்துகின்றன.

ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய வாழ்க் கையில் முக்கியமான நிகழ்ச்சி என்று கருதப்படும் இப்புனிதமான திருமணம் போன்ற காரியங்களில் தேவனுடைய ஆலோசனை என்ன என்று தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். **ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர் களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந் திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இப் படி இருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமா யிருக்கிறார்கள் ; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்** என்று திருமணத்தின் உயர்ந்த நோக்கத்தை விவரிக்கிறார். (மத். 19 : 4, 6) மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் தேவ ஆலோசனையே மிகச் சிறந்தது. ஆகையால், திருமணத்தை ஒரு வரும் அற்பமாக எண்ணி யோசனையின்றிச் செய்யாமல் கருத்தோடும், ஜெபத்தோடும், சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். அதற்கப்புறம் திருமணத்தில் இணைக்கப்பட்ட ஒரு ஆணும், பெண்ணும் தங்கள் பெற்றோர்

களிடமிருந்து தனித்து இருவரும் சிந்தனையிலும், செயலிலும், ஒருமனப்படுவதற்கு முயல வேண்டும். ஏனெனில், அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

**ஒவ்வொருவனும் தன் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்** ( கொரி. 18 : 24 ) என்று கூறப்பட்டிருப்பதின் பொருளை உணர்ந்து கணவன் மனைவிக்குள் ஏற்படும் சிறு சிறு மனஸ்தாபங்களைப் பொருட் படுத்தாமல் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆனால், நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? தேவனுடைய எந்த ஒரு திட்டத்தையும் மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்வது கிடையாது. தாயையும், தகப்பனையும் விட்டு மனைவியோடு இசைந்திருக்கக்கடவன் என்று தேவ ஆலோசனை தெளிவாக இருந்தும் சில ஆடவர்கள் பெற்றோர்களுடைய நிழலிலேயே தாபரிக்க விரும்புகிறார்கள். வேறு சிலர் தனியாகப் போய் நாம் சமாளிக்க முடியாது என்று பயந்து கொண்டு தாயாரின் முந்தாணையைப் பிடித்துக் கொண்டே நடக்க விரும்புகிறார்கள். இந்தக் கூட்டுக் குடும்ப முறை சில குடும்பங்களில் வெற்றி நடைபோடும். பல குடும்பங்களுக்குச் சரிப்பட்டு வருவதில்லை. ஆரம்பத்தில் லேசாகப் புகைந்து மோதல் ஏற்பட்டு பிரச்சனைகள் முற்றி சண்டையிலும், சச்சரவுகளிலும் போய் நிற்கும். பரஸ்பரம் மாறி ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டுவது தொடரும். இப்படிப்பட்ட கால கட்டங்களில் பெரும்பாலும் பாதிக் கப்படுவது புதியதாய்க் குடும்பத்தில் வந்த மருமகள் தான். சம்பந்தப்பட்ட அனைவரும் தாங்கள் இந்த விவகாரங்களில் என்ன செய்திருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை தேவனுடைய ஆலோசனையை நாம் புறக்கணித்து விட்டதால் ஏற்பட்ட கோளாறு என்றெல்லாம் சிந்திக் காமல், சோதனைகள் வந்து வேதனைகள் பெருகும் போது மனம் வெறுத்து, தான் தேவனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாகக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, போதும் திருமண வாழ்க்கையின் சுகம் என்று விரக்தியடைந்து, விவாகரத்து பற்றிய சிந்தனையில் மூழ்குவது கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல.

சொல்லப்போனால் குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கு திருமண முறிவு ஒரு தீர்வே அல்ல. மாறாக, அது அதிகமான பிரச்சனைகளை உருவாக்கும் என்றால் மிகையாகாது. விவாகரத்து சமுதாயம் என்ற மாளிகையின் அஸ்திபாரமாகிய குடும்பம் என்னும் கட்டுக்கோப்

பைக் குலைத்துப் போடுவதின் மூலம் அதன் மேல் கட்டப்பட்டுள்ள சமுதாய அமைப்புக்கு பெரும் தீமைகளை விளைவிக்கும், ஆகையால், வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போது அவைகளை ஞானமாகச் சமாளிப்பதற்கு முற்பட வேண்டுமேயல்லாமல் மணமுறிவு என்பதை மனதிலும் நினைக்கக் கூடாது. அதைவிட கொஞ்சம் விட்டுக் கொடுத்து வாழ்ந்து சம்பந்தப்பட்டவர்களுடைய அன்பைப் பெற முயற்சிக்கலாமே.

கணவன்மார்கள் முரடர்களாகவும், மனைவி மக்களின் நலனில் அக்கறையில்லாதவர்களாகவும், தன்னலமுள்ளவர்களாகவும் நடந்து கொள்பவராகக் கூட இருக்கலாம். அதற்குச் சவால் விடுகிற பாணியில் மனைவிமார்களும் நடந்து கொண்டால் குடும்பம் சிதையும். நஷ்டம் பெரும்பாலும் பலவீனமான பாத்திரமாகிய தாய்க்குலத்துக்கே. கத்தி சுரைக் காய் மேல் விழுந்தால் பாதிக்கப்படுவது சுரைக்காய் தானே. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்** என்று கற்பித்திருக்கிறபடி செய்து பார்க்க முயலலாமே (மத். 5 : 44). உங்கள் பொறுமையும், சகிப்புத் தன்மையும், உங்கள் ஜெபமும் என்றாவது ஒரு நாள் உங்கள் கணவரின் உள்ளத்தை உடைத்து உங்கள் மேல் அன்பு செலுத்த வழிகோலுமே. முயன்று பாருங்கள்.

இந்தப் பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதற்கு வருமுன் காத்தல் என்ற தடுப்பு முறையைக் கையாள்வது இன்னும் சிறந்தது. திருமணத்துக்கு முந்தியே சம்பந்தப்படவிருக்கிற குடும்ப சூழ்நிலைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முற்படுவது பயன்தரும். **அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப் பாடதிருப்பீர்களாக என்ற தேவ ஆலோசனையை ஏற்றுக் கொண்டு** ( 2 கொரி. 6 : 14 ) அவர்களுடைய விசுவாச நிலையைக் கூடத் தெரிந்து கொண்டு திருமண ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களில் கொஞ்சம் காலதாமதம் கூட ஆகலாம். ஆனால், மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல என்று ஆதாமுக்கு ஏற்ற துணையாக ஏவாளை உண்டாக்கினது போல, தேவன் ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணையும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணையும் உண்டாக்கியே இருப்பார் என்று நம்பிக்கையோடு பொறுமையாயிருந்தால் கர்த்தர் ஏற்ற காலத்தில் எல்லாவற்றையும் வாய்க்கச்செய்வார். ●

வாலிபர் பகுதி

# சிலுவை சுமக்க ஆயத்தமா?

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவரையும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். அன்பானவர்களே! உலகமுழுவதும் உள்ளவர்களின் இரட்சிப்பு இயேசுவையும் அவருடைய சிலுவையையும் மையமாகக் கொண்டுள்ளது. தேவக் குமாரனின் தியாகம், மனித இனத்தைக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தேவனிடத்தில் இழுத்து வருகிறது. உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சத்துருகளால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச்சேவகரால் துன்புறுத்தப்பட்டு, பரியாசம் செய்யப்பட்டார். சத்துருக்கள் அவரைக் காரித்துப்பி அதன்பிறகு கொடூர மான சிலவையில் அவரைக் கொலை செய்தனர். கிறிஸ்துவின் சிலவை மரணத்தை மத்தேயு ஆசிரியர் இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். அவரை சிலுவையில் அறைந்த பின்பு, அவர்கள் அங்கே உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள் (மத்தேயு 27 : 35, 36). இது பழைய ஏற்பாட்டில் சங்கீதக்காரனாகிய தாவீது உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது (சங்கீதம் 22 : 18).

சில மணிநேர கடுமையான பாடுகளுக்குப் பிறகு இயேசு சிலுவையில் தன் ஜீவனை விட்டார். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்துவின் பாடுகளைப் பக்கத்தில் நின்று பார்த்தது போலவே பதிவு செய் திருக்கிறார். அதுவும், கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே அவருடைய பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்த அதிகா ரத்தைப்படிக்கும்போது நாம் மெய்யாகவே மெய்சிலிர்த்துப் போகிறோம். இச்சிலுவைப் பாடுகளைச் சகிக்க அவருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அவர் என்ன பாவம் செய்தார்? இல்லை, அவர் எந்தப் பாவத்தையும் செய்ய வில்லை. ஆனால், என் பாவங்களுக்காகவும் உங்கள் பாவங்களுக்காக வும் இயேசு அக்கோரக்குருசில் தமது குருதியைச் சிந்தினார். வாலிபர்களே! இவ்வுலகில் நமக்காக நம் பாவங்களுக்காக யாராவது உயிரை விடுவார் களா? உயிரை விடாவிட்டாலும் பரவாயில்லை, பாடுகளையாவது படுவார் களா? நிச்சயமாகவே அதற்கு யாரும் தயாராக இல்லை. ஆனால் கிறிஸ்து நமக்காகப் பாடுகள் பட்டதற்கும் சிலுவையில் மரித்ததற்கும் தூண்டுகோ லாக அமைத்து அவர் நம்மீது வைத்த அன்புதான். இப்போது, இச்சிலுவை

எவைகளை அடையாளப்படுத்துகிறது என்று நாம் பார்ப்போம்.

**I சிலுவை பாவத்தின் ஆழத்தைச் சுட்டிக்காட்டுகிறது**

சிவவை கிறிஸ்துவைப் பற்றி மாபெரும் உண்மைகளை அடையாளப்படுத்துகிறது. முதலாவது இச்சிலுவை பாவத்தின் ஆழத்தைச் சுட்டிக் காட்டுகிறது. பாவத்தின் கோரத்தைச் சிதைந்து போன குடும்பங்களிலும், பயங்கர பகையுணர்விலும் நாம் காணலாம். ஆனால் இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத்தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனுடைய மாபெரும் முயற்சியாகும். தேவ மைந்தனின் சிலுவை மரணத்திற்கு நம் பாவமே காரணமாக அமைந்தது. பாவமே அறியாத இயேசுவை தேவன் நமக்காகப் பாவமாக்கினார் (II கொரி. 5 : 21). பரலோகத்தின் பொக்கிஷமாகிய இயேசு இப்பாழுலகத்திற்கு வந்து பாடுபட வேண்டும் என்று அவருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அக்காட்சியை நம் கண்களுக்கு முன்னால் கொண்டு வந்தால், இப்பூலோக மேன்மை நஷ்டமென்று உணர உந்தப்படுவோம். இதைக் குறித்து பவுல் கூறும்போது, **கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. ஏனென்றால் எல்லோருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லோரும் மரித்தார்களென்றும் பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத் திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்**(கொரி. 5 : 14, 15 ). நமக்காக சிலுவையில் தம்முடைய ஜீவனையே விட்ட கிறிஸ்துவுக்காக வாழ அவருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவ வேண்டும்.

**II சிலுவை இரக்கத்தின் அகலத்தை சுட்டிக் காட்டுகிறது**

தேவனுடைய அளவில்லா இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஓர் அடையாளமாக இருக்கிறது. அது கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டு மென்பது தேவனுடைய சித்தமாக இருந்தாலும், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டியிருக்கிறார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்குத் தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவன் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம் மேதியர் பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர் பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. அது மாத்திரமல்ல, அவர்களின் தண்டனைகளுக்கு யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்குக் கண்ணும் பல்லுக்குப் பல்லும் கேட்கப்படும். ஓர் இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களைக் கெடுத்துப் போட்டான். அவனுடைய குற்றத்திற்குத் தண்டனையாக அந்த

இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென சட்டம் சொல்கிறது. அந்தக் குற்றவாளி விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப் பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்து விட்டது.. அங்கே நீதி மற்றும் இரக்கம் இவவரண்டின் அழுகை சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. அந்த நீதிபதி தன் மகனைஅதிகமாக நேசித்தான். ஆனால், தவறு செய்தவன் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உடையவனாகக் காணப்பட்டான். நீண்ட நேர யோசனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னான். **உன் நீதிபதி என்ற நிலையில் நீ அழித்த இரண்டு கண்களுக்குப் பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும். சட்டம் சொல்வதற்குக் குவைான தண்டனையை உனக்கு விதிக்க முடியாது. ஆனால், உன் தகப்பன் என்ற நிலையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பெருட்டு என்னுடைய கண்களில் ஒன்றைத் தருகிறேன் என்று சென்னாராம்.** இது இரக்கத்தைப் பற்றிய ஒரு பாடமாக நமக்கு அமைகிறது. எனவே சிலுவையானது மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

III **சிலுவை இரட்சிப்பின் வல்லமையைச் சுட்டிக் காட்டுகிறது.**

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப் படுத்துகிறது. **சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது** ( I கொரிந்தியர் 1 : 18 ). கிறிஸ்துவினுடைய சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான். கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லையென்றால் இரட்சிப்பு என்பது எட்டாக்கனியாக, ஒரு கானல் நீராகத்தான் இருந்திருக்கும். நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படவில்லையென்றால், நித்திய நரகத்தில் நம் நாட்களை கழிக்க வேண்டும். கொல்கொதாவில் தேவ குமாரன் தமது ஒரு கரத்தை பரத்திற்கு நேராக நீட்டி தேவனை பிடித்துக் கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனுடைய இருதயத்தைத் தொட்டுள்ளார். அதன் மூலம் சிலுவையில் தொங்கின கிறிஸ்து மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார்.

இப்படி நமக்காக சிலுவையில் மரித்து நம் இரட்சிப்பிற்கு வழி வகுத்த இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி **ஒருவன் என்னைப் பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக்கடவன்** என்று சொல்லியிருக்கிறார் (மத்தேயு 16 : 24 ). நமக்காக பாடுகள்பட்ட அருள் நாதராகிய இயேசுவுக்காக அவருடைய தியாகத்திற்காக இவ்வுலகின் பாடுகளைப் பற்றிப் பதறாமல் பாடுகளைச் சுமந்து கொண்டு அவரைப் பின்பற்றுவோம், பரலோகம் சென்றடைவோம். அதற்கு கர்த்தர் தாமே உதவி செய்வாராக. ஆமென். ●

சிறுவர் பகுதி

# வேவுகாரர்கள்

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான தம்பி தங்கைளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்களா? மீண்டும் இந்த நூலின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிறுவர் பகுதியில் நீங்கள் வாசிக்கின்ற அனைத்தும் உங்களுக்கு நன்மையாக இருக்கும் என நம்புகிறேன். சரி குழந்தைகளே! இந்த மாதத்திற்கான வேதபாடத்திற்கு ஆயத்தமா? வேதாகமத்தை எண்ணாகமம் 13, 14 ம் அதிகாரங்களுக்குத் திருப்புங்கள்.

பிள்ளைகளே! இஸ்ரவேல் தேசத்தாருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பேன் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார். அப்படிக் கொடுப்பதற்கு முன்பு 12 கோத்திரங்களில் ஒரு கோத்திரத்திற்கு ஒருவர் என்ற முறையில் 12 மனிதர்களை வேவு பார்க்க தெரிந்து கொண்டு, கானான் தேசத்தை வேவு பார்த்துவரும்படி அனுப்பவேண்டும் என்று தேவன் மோசேக்கு கட்டளையிட்டார். தேவன் சொன்னதுபோல் மோசே 12 பேரைத் தெரிந்து கொண்டு அனுப்பினார். குடியிருக்கிறவர்கள் தேசத்தின் நிலம் அதன் விளைச்சல் என அனைத்து காரியங்களையும் பார்த்து வர வேவுகாரர் களுக்கு கட்டளை கொடுத்தார். 40 நாள் அவர்கள் வேவு பார்த்து மோசே யினிடத்திற்கும் இஸ்ரேவேல் ஜனத்தாரிடத்திற்கும் அந்த 12 வேவுகாரர்கள் திரும்பி வந்தார்கள். அவர்கள் வரும் போது திராட்சை பழம் மாதுளம் பழம் மற்றும் அத்திப் பழங்களைத் தங்களோடு கொண்டுவந்தார்கள்.

வேவு பார்த்து வந்த அந்த 12 பேரும் மோசேயை நோக்கி கானான் பாலும், தேனும் ஓடுகிற தேசம் என்று சொன்னார்கள். ஆயினும், அந்த 12 பேரில் 10 பேர் கானான் தேசத்தை நாம் ஜெயிக்க முடியாது. அந்த கானான் தேசத்து மனிதர்கள் பார்வைக்கு இராட்சதர்களைப் போல் இருக்கிறார்கள் என்று சொல்லி இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவிசுவாசத்தையும் பயத்தையும் ஏற்படுத்தினார்கள். ஆனால், மற்ற இரண்டு வேவுகாரர்களாகிய காலேபும் யோசுவாவும் கர்த்தர் நம் மேல் பிரியமாயிருந்தால் பாலும், தேனும் ஓடுகிற தேசத்தை நமக்குக் கொடுக்க வல்லவர் என்று சொன்னார்கள்.

நடந்தது என்ன தெரியுமா? காலேப்பையும் யோசுவாவையும் தவிர

மற்ற 10 வேவுகாரர்களையும் தேவன் வாதையினால் சாகும்படி செய்தார். ஏன்? அப்படி வாதையினால் சாகும் அளவிற்கு அவர்கள் என்ன தவறு செய்தார்கள்?

பிள்ளைகளே! கொடுப்பேன் என்று தேவன் சொன்ன கானான் தேசத்தை, சுலபமாக இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்க தேவன் வல்லவர் தான். ஆனாலும், அவர்கள் தம் மீது எவ்வளவு நம்பிக்கையாய் இருக்கிறார்கள் என்பதை அவர் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார். வாதையினால் செத்த அந்த 10 வேவுக்காரர்கள் செய்த தவறு **தேவன் கொடுப்பேன் என்று சொன்ன வாக்குத்தத்தத்தை விசுவாசியாமல்,அந்த தேசத்தாரோடு போர் வந்தால் தோற்றுவிடுவோம்** என்று நினைத்தார்கள். **தேவன் தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முடியாது** என்று நினைத்தார்கள். **கானான் தேசத்து மனிதர்கள் எவ்வளவு பலசாலிகளாக இருந்தாலும்,தேவன் கொடுக்க நினைத்ததை, யாராலும் தடுக்க முடியாது** என்று விசுவாசித்த இருவர்தான் கானானுக்குள் பிரவேசித்தார்கள்.

அன்புக் குழந்தைகளே! தேவன் நம்மை எப்போதும் கைவிடமாட்டார். அவர் நமக்கு அனைத்து ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தமாகக் கொடுத்திருக்கிறார். அதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், தேவனின் வல்லமையை சந்தேகப்படாமல், காலேப் யோசுவா போல் தேவன் மீது முழு நம்பிக்கையாய் இருக்க வேண்டும். அப்படியாக, இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன் ஜெபிக்கிறேன். ●

## நாளும் நடப்பும்

- ✍ 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் - 2 ல் தொடங்கி , மார்ச் - 31ல் முடிவடையும்.
- ✍ 10 -ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் - 8 ல் தொடங்கி, மார்ச் - 28ல் முடிவடையும்.
- ✍ மார்ச் - 16 ல் 2017 - 2018 ம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் -நிதி அமைச்சர்.
- ✍ தமிழகத்தில் பரவலான மழை பெய்தது – வானிலை ஆய்வு மையம்.
- ✍ மீண்டும் பெட்ரோல் டீசலுக்கான வரி உயர்வு – அமைச்சர்.

## வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் எழுதி அனுப்பவும். இதற்கான விடை ஏப்ரல் மாத இதழில்!**

1. ஆதியாகமத்தில் எத்தனை அதிகாரங்களும், வசனங்களும் உள்ளன?
2. பூமியெங்கும் ஒரே விதமாக இருந்தவைகள் யாவை?
3. எந்த இடத்தில் தேவன் பாஷைகளைத் தாறுமாறாக்கினார்?
4. ஆபிரகாமின் தகப்பன் மற்றும் சகோதரர்கள் யார்?
5. ஆரானை விட்டு ஆபிரகாம் புறப்பட்டபோது அவருடைய வயது என்ன?
6. யார் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் வாதித்தார்?
7. ஆபிரகாமின் சகோதரனுடைய குமாரன் யார்?
8. ஆபிரகாம் வீட்டின் விசாரணைக் கர்த்தனாய் இருந்தது யார்?
9. ஆபிரகாமின் சந்ததி அந்நிய தேசத்தில் எத்தனை வருஷம் உபத்திரவப்படுவார்கள் ?
10. ஆபிரகாம் என்ற பெயரின் அர்த்தம் என்ன?

## பிப்ரவரி மாத கேள்விகளுக்கான பதில்கள்

1. கேருபீன்களையும், சுடரொளி பட்டயத்தையும் ( ஆதி.3 : 24 )
2. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் ( ஆதி. 3 : 24 )
3. ஏனோஸின் நாட்களில் ( ஆதி. 4 : 26)
4. மெத்தூசலா – வருஷம் 969 ( ஆதி. 5 : 27 )
5. லாமேக்கு ( ஆதி.5 : 30 )
6. 120 வருஷம் ( ஆதி. 6 : 3 )
7. கொப்பேர் மரம் ( ஆதி.6 : 14 )
8. ஆபேலின் காணிக்கை ( ஆதி. 4 : 4 )
9. பேலேகுவின் நாட்களில் ( ஆதி.10 : 25 )
10. இரத்தத்தில் ( ஆதி. 9 : 4)

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாடு எந்த அளவுக்கு முக்கியமற்றது? புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி ஆராதனையில் இசைக் கருவிகளின் பயன்பாடு அனுமதிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஆராதனையில் இசைக் கருவிகளை வாசித்து விட்டு மற்ற பங்குகளையெல்லாம் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி செய்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்களா? தேவனோடு நித்தியத்தைக் கழிக்க முடியாதபடிக்கு, அதைத் தடைசெய்யும் அளவுக்கு ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவது அவ்வளவு பெரிய பாவமா?

**பதில் :** ஆம், கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டிற்கு புதிய ஏற்பாடு அதிகாரம் கொடுக்கவில்லை என்பது மிகவும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அதற்குப் பதிலாக வாய்ப்பாட்டு அதாவது மனிதகுரல்வளத்தால் பாடல் பாடுவதுதான் புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் **இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்** கீர்த்தனம் பண்ணி என்று வசனம் கூறுகிறது (எபே. 5 : 19 ; கொலோ 3 : 10) நாம் சர்வ வல்ல தேவனை ஆராதிக்க அங்கீகரிக்கப்படாத ஒன்றைச் செய்வது, சர்வவல்ல தேவனை ஆராதிக்க அங்கீகரிக்கப்பட்ட ஒன்றிற்கு நேர் எதிரான செயலாகும். அப்படிச் செய்தால் அது தேவ சமூகத்தில் பாவமாகப் பார்க்கப்படுகிறது. லேவி 10 : 1, 2 – ம் வசனங்களில் நாதாபும், அபியூவும் அந்நிய அக்கினியை அதாவது கர்த்தர் கட்டளையிடாததைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆரோனின் குமாரர்கள் என்பதற்காக அவர்களைத் தேவன் தண்டிக்காமல் விடவில்லை. மாறாக, கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்களைப் பட்சித்ததினால் அவர்கள் கர்த்தரின் சந்தியிலே செத்தார்கள்.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் பாவத்திற்கான சம்பளம் ஆவிக் குரிய மரணம் என்று பரிசுத்த எழுத்தர்களில் பதிவு செய்திருக்கிறார் (ரோமர் 6 : 23). பாவம் எப்போதுமே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே என்றென்றும் சேரக்கூடாதபடிக்கு பிரிவினையை உண்டாக்குகிறது. இதோ இரட் சிக்கக்கூடாத படிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை. கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக் கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது (ஏசாயா :59: 1, 2). எந்தப் பாவமாக இருந்தாலும் சரி. தேவன் கட்டளையிடாத அங்கீ கரிக்காத செயலைச் செய்யும்போது வெளி 21 : 8 ன்படி அது நம் ஆத்துமாவை நரகத்தில் ஆக்கினைக்குட்படுத்தும் தன்மை கொண்டதாயிருக்கிறது. ●

# துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்

Bro. பாண்டியன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக! மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர் சொன்ன இரண்டாவது வார்த்தையே– துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள் என் பது. ஆவிக்குரிய மனுஷன் பொதுவாகக் கவலைப்படக்கூடாது என்பதே கிறிஸ்துவின் உபதேசமாகும். அது நாளைய தினத்தைக்குறித்தும், என்னத்தை உண்போம், புசிப்போம், மற்றும் என்னத்தை உடுப்போம் போன்ற சரீரக்கவலைகளைக் குறித்து ஆண்டவர் கண்டித்திருப்பதை நாம் அறிவோம். ஆனால் நமது தலைப்பில் உள்ள துயரப்படுகிறவர்கள் பாக்கியவான் என்பது, தான் செய்த தவறுக்கு வருத்தப்படுகிறவர்கள் குறித்துப் பேசுகிறது. நாம் அநேக விஷயங்களில் தவறுகிறவர்களாய் இருப்பதால் தான், அநேகர் போதகர் ஆகாதிருப்பீர்களாக என்று யாக்கோபு எச்சரிக்கின்றார். ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவைப் போல தேவனுக்குப் பிரியமாக வாழப் பிரயாசப்படுகிறவனாய் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் நமக்கு உணர்வைக் கொடுத்து, எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்க கற்றுக்கொடுக்கிறது (சங் 119 : 104). தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக நடக்கும் போது அவன் இருதயம் வாதிக்கப்படுவதையே துயரப்படுதல் என்று வேதம் அர்த்தப்படுத்துகிறது. சுமக்க முடியாத பாரமாய் இருந்த நியாயப்பிரமாண கட்டளைகளைக் கைக்கொள்ளமுடியாமல் தேவனுக்குப் பிரியமாக நடக்கமுடியவில்லையே என்று துயரப்படுகிறவர்களைப் பார்த்துதான் அவர்கள் என்னுடைய உபதேசத்தினால் ஆறுதல் அடைவார்கள் என்று கிறிஸ்து சொன்னார்.

நாம் வாழும் சமுதாயத்தில் மனுஷர் செய்த தவறுக்கு வருந்துவதாகத் தெரியவில்லை. அதற்கான காரணத்தை ஞானி சொல்லியிருக்கிறார். **துர்க்கிரியைக்கு தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டிருக்கிறது** (பிரசங்கி 8 : 11). அதனால் தான் ரௌடிகள் மதிக்கப்படுகிறார்கள். ஆனால் அதெல்லாம் தற்காலிகம்தான் அதன் முடிவு மோசமாகத்தான் இருக்கும் என்று மனிதன் உணர்வதில்லை. இஸ்ரவேல் ஜனம் தேவனுடைய தீர்க்கதிரிசிகளால் எச்சரிக்கப்பட்டனர்.

ஆனால் அவர்கள் அதை அசட்டை செய்து கேளாமற்போனபடியால் **உங்களை நான் தள்ளிப் போடுவேன்** (எரேமி 7 : 15) என்றார் தேவன். ஆக துர்க்கிரியைகளை தேவன் எப்போதுமே அனுமதிப்பது இல்லை என்று காண்கிறோம். இன்னுமாய் அவர்கள் தேவனை பாவத்தோடே வணங்க முற்பட்டபோது அது **புளித்த மாவுள்ள ஸ்தோத்திர பலி** என்றும், அதற்குத் தண்டனையாக அப்பக்குறைவு ( பட்டினி ) உண்டாக்குவேன் என்றும் எச்சரித்தார். ஆனால் அவர்களோ மனந்திரும்பவில்லை (ஆமோஸ் 4 : 5, 6 ). புதிய ஏற்பாட்டில் நாம் அப்பம் பிட்கிற **பஸ்கா**வைப் பற்றி குறிப்பிடும் பவுல் **துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடே அல்ல, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்** என வலியுறுத்துகிறார் ( 1 கொரி 5 : 8 ) பாவியை நேசித்தாலும், பாவத்தை தேவன் வெறுக்கிறார். நாம் சபைகூடிவரும் போது நாம் கேட்கும் வேத ஆலோசனைகள் நம்மை உணர்த்துகிறது. நம்மிடத்தில் காணப்படுகிற தேவனுக்கு ஆகாத காரியங்கள் நமக்குத் துயரத்தை உண்டாக்க வேண்டும். அதுவே நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்று இருப்பதற்கான அடையாளமாகும். நாம் தேவனுக்குப் பிரியமாக வாழவே அவர் நமக்குள் கொடுக்கப்பட்டுள்ளார். அவரை நம் துர்ச்செய்கைகளினால் நாம் துக்கப்படுத்தக்கூடாது (எபேசி 4 : 30 - 32) என்றும் எச்சரிக்கப்படுகிறோம்.

நமதாண்டவர் இயேசு தமது ஊழியக் காலத்தில் அநேக அற்புதங்களைச் செய்ததை நாம் அறிந்திருக்கிறோம். திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்ற அதே சமயத்தில் சில பட்டணத்தார் அவருடைய பலத்த செய்கைகளைக் கண்டும் மனந்திரும்பவில்லை. கோராசின், பெத்சாயிதா போன்ற அப்படிப்பட்ட பட்டணங்களைப் பார்த்து **உங்களுக்கு ஐயோ!** என்றும், நியாயதீர்ப்பில் அவைகள் கடுமையான விளைவுகளைச் சந்திக்கும் என்று கடிந்து கொண்டார் (மத் 1 : 20 - 22). இன்றைக்கும் சுவிசேஷத்தைக் கேட்டும் அசட்டையாக எண்ணும் மாந்தரின் நிலைமை பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. மட்டுமல்ல இரட்சிக்கப்பட்டு சபையிலிருக்கும் விசுவாசிகளாகிய நமக்கும் இது ஒரு எச்சரிப்பாகும். வசனங்கள் நமக்கு உணர்த்தும் போது நாம் மனம் வருந்தி, துயரப்பட்டுத் திருந்தாவிட்டால் நமக்கும் அதே நிலைமைதான் என்று எபிரெய ஆசிரியர் திட்டவட்டமாகக் கூறுவதைக் கவனிப்போம். **தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கு ஏற்றப்பலனை தரும் நிலம் தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுவதற்கு ஏற்றதாயும் இருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதன்முடிவு** (எபி 6 : 7, 8). எனவே தான்

ஆரம்பத்திலேயே யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்று கடிந்து கொண்டார். அதுமாத்திரமல்ல இப்போழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலேப் போடப்படும் என்றும் எச்சரித்தார். அதையே பேதுரு அப்போஸ்தலன் நியாயதீர்ப்பு முந்தி தேவனுடைய வீட்டில் துவக்குங்காலமாயிருக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார் ( 1 பேதுரு 4 : 17 ). எனக்கன்பான சகோதரனே, சகோதரியே சிலர் நினைப்பது போல் சபையில் ஞானஸ்நானம் பெறு வதால் மட்டுமே நாம் பரலோகம் செல்லும் தகுதியை அடைந்துவிட்டோம் என்று எண்ணலாகாது. ஞானஸ்நானத்தில் இரட்சிப்பு இருப்பது உண் மையே என்றாலும் பெற்றுக்கொண்ட இரட்சிப்பிக்கேற்ற வாழ்க்கையை நாம் வாழ வேண்டியதும் அவசியமாகிறது. அதைத் தான் பவுல், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் ( பிலி 2 : 12 ) என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். **கிறிஸ்தவ வாழ்க்கை தேவபயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுகிற ஒரு வாழ்க்கையாகும்.**

எனவே உலக மக்களைப்போல நாமும் புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று வாழமுடியாது. மனுஷன் வெந்ததைத் தின்று வேளைவந்தால் சாகவேண்டியது போன்ற வெட்டிப் பேச்சுக்கள் எல்லாம் உதவாது. அவனுடைய பேச்சு, நினைவு மற்றும் செயல்கள் எல்லாமே மாறவேண்டும் என்பதே கிறிஸ்துவின் போதனையாக இருக்கிறது. எசேக்கியேல் புத்தகத்தில், பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும் என்றும் துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமல்ல; மனந்திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள் என்றும் தேவன் எச்சரிக்கின்றார் ( எசேக் 18 : 32 ). அதே கருத்தை புதிய ஏற்பாட்டில் தேவக்குமாரன் கிறிஸ்து **நானே அவரென்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்** என்றார் (யோவான் 8:24). கிறிஸ்து நமது கடந்த காலப் பாவங்களை ஞானஸ்நானத்தில் மன்னிக்கிறார். அதன்பிறகு நாம் தவறும் போது நம்முடைய பாவங்களை நாம்(அவரிடம்) அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார் (1 யோவா 1 : 9). மேற்கண்ட வசனப்பகுதி இரட்சிக்கப்பட்டு சபையில் இருப்பவர்களுக்கே எழுதப்பட்டுள்ளது என்பதை நினைவில் வையுங்கள். அதனால் தான் தொடர்ந்து யோவான் இந்நிருபத்தில் எழுதும் போது, **என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்வானானால் கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில்**

**பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்** என்று குறிப்பிடுகிறார். நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிப்பது உண்மைதான். ஆனால் கிருபை பெருகும்படிக்கு நாம் பாவத்தில் நிலைநிற்காலமா? கூடாதே! என்கிறார் பவுல் (ரோம 6 : 1). ஆக ஒருவன் தவறு செய்யும் போது துயரப்பட்டால் மாத்திரமே தன்னை மாற்றிக் கொள்ள வகை தேடுவான். அதற்கான வழியை கிறிஸ்துவிடம் மாத்திரமே நாம் பெற்றுக்கொள்ளமுடியும். கிறிஸ்துவின் முக்கிய உபதேசமே **மனந்திரும்புங்கள் பரலோகராஜ்ஜியம் சம்பித்திருக்கிறது** என்று தான் ஆரம்பிக்கிறது. இப்போது நாம் ராஜ்யத்தில் இருந்தாலும் தொடர்ந்து நம்மைச் சரிப்படுத்திக்கொண்டு வாழ வேண்டியவர்களாயிருக்கிறோம். மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்ற மாயவித்தைக்காரன் சீமோன் பரிசுத்த ஆவியானவரை பணத்தினால் சம்பாதிக்க முயற்சி செய்தபோது உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பு என்று பேதுரு கடிந்து கொண்டார் (அப் 8:21,22). ஆக, இரட்சிக்கப்பட்டவர்களும் தவறும்போது மனந்திரும்பி வாழ வேண்டும் என்பதே தேவசித்தமாய் இருக்கிறது.

சீலோவாம் என்ற இடத்தில் கோபுரம் இடிந்து விழுந்து பதினெட்டு பேர் செத்துப்போனதைப்பற்றிக் குறிப்பிட்டு பேசியபோது ஆண்டவர் சொன்னது என்ன? இறந்துபோன அவர்கள் மாத்திரம் குற்றவாளிகள் என்று எண்ணாதிருங்கள். ஏனெனில் **நீங்களும் மனம் திரும்பாமற்போனால் அப்படியே கெட்டுப் போவீர்கள்** என்றார். நாமும் இன்றைக்கு அநேக மரணங்களைப் பற்றி அப்படித்தான் எண்ணுகிறோம். ஆனால் நாமும் மனந்திரும்பாமல் போனால் நாமும் கெட்டுப்போவோம் என்பதே உண்மை! அதையே ஆண்டவர் எளிமையாக **துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள் என்று சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் ராஜா ஓசேயா காலத்தில் ஜனங்கள் தேவனைவிட்டு விலகியிருந்த போது, உங்களை எகிப்து ராஜாவிடமிருந்து விடுதலை பண்ணின தேவனை விட்டு அந்நிய தேவர்களை சேவிக்கிறீர்களே? என்று தேவன் தீர்க்கதரிசிகள் மூலம் கண்டித்தார். ஆனால் அவர்கள் செவிகொடுத்து துயரப்பட்டு மனந்திரும்ப வில்லை. எனவே தேவன் அந்த ஜனங்களைப் புறக்கணித்து கொள் ளையர் கையில் ஒப்புக்கொடுத்ததைக் காண்கிறோம்** (2 ராஜா 17:20). இன்றைக்கும் நாம் தேவனை விட்டு விலகும் போது நம் பிரயாசங்களும் வருமானங்களும் வீணாகப் போகக்கூடிய அபாயமுண்டு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலும் நமக்கு தேவன் உணர்த்தும் காரியங்களுக்கு துயரப்பட்டு தேவனிடம் திரும்பி ஆசீர் பெறுவோம். தேவக்கிருபை நம் அனைவருக்கும் உண்டாவதாக. ஆமென்.

# நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?

Bro. Clytonpepper

**தே**வனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். அந்நாளில் தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெச. 1 : 7 - 10).

சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாத ஒருவர் நித்திய அழிவில் இழந்து போகிறபடியால் சுவசேஷம் என்றால் என்ன? அதற்கு எப்படி கீழ்ப்படிவது என்கின்ற கேள்வி எழும்புகிறது.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான விடையைக் கொடுக்கிறார். அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தப்பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்; அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து ( 1 கொரி. 15 : 1 - 4 ). ஏசாயா 53 ஆம் அதிகாரத்தைப் பார்க்கவும்.

நாம் பாவம் செய்ததினால் நாம் அனுபவிக்க வேண்டிய தண்ட

னையை கிறிஸ்து அவராகவே முன்வந்து அந்தத் தண்டனையை ஏற்றுக்கொண்டார். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6 : 23).

**சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவ்வளவு அவசரமானதா?**

ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்ற தீர்மானத்தைத் தள்ளிப்போடக்கூடாது என்பதற்கான இரண்டு காரணங்களை நாம் இப்போது காணலாம் :

1. **வாழ்க்கையின் நிச்சயமற்றத் தன்மை** : நாம் வாழும் வாழ்க்கை நிரந்தரமல்ல என்று அனுதினமும் நினைவுபடுத்தப்படுகிறோம். எதிர்பாராத நேரங்களில் பெரும்பாலும் வியாதி, விபத்து போன்றவைகள் மரணத்தை கொண்டு வருகின்றன. எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9 : 27) என்று.

2. **எதிர்பாராத விதத்தில் கிறிஸ்துவின் வருகை** : கிறிஸ்து எதிர்பாராத நேரத்தில் வருவார் என்று வேதாகமம் போதிக்கிறது. அவருடைய வருகை இரவிலே திருடன் வருகிறவிதமாய் இருக்கும் (1 தெச. 5 : 2). இது எப்போது சம்பவிக்கும் என்று யாருக்கும் தெரியாது.

**யார் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்?**

1. மறுபடியும் பிறக்க விரும்புகிற யாவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் (யோ 3 : 3 - 5). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாததினால் இழந்து போன யாவரும் இரட்சிக்கப்பட இப்படிச் செய்ய வேண்டும். ஒருவர் கிறிஸ்துவை மனதளவில் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வது போதுமானதல்ல. அது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவில்லை என்ற குறையை வைக்கிறது.

2. தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். உண்மையான ஞானஸ்நானமானது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதலாகும் ( ரோமர் 3 : 7 ; கொலோ 2 : 12 ; யோ. 3 : 23 ). போதிக்கப்படத்தக்கவர்கள், வேதவாக்கியங்களின்படி சுவிசேஷத்தைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமே அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். வேத வசனங்களின் அடிப்படையில் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் ஞானஸ்நானம் பெறவில்லை.

3. கிறிஸ்துவை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவும், பாவிகளுடைய ஜெபத்தை செய்யும்படியாக சொல்லப்பட்டவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்: இந்த செயல் (லூக்கா 18 : 9 - 14) வசனங்களில் நாம் பார்க்கும் ஆயக்காரன், பரிசேயன் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தவறான முறையில் போதிக்கப்படுவதாகும். இந்த சம்பவமானது நாம் சுயநீதியுடையவர்களாய் இருக்கக்கூடாது. மாறாக, தாழ்மை மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் இது நமக்குப் போதிக்கிறது. ஒருவர் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்று இது சொல்லவில்லை. ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்படமுடியும் என்று போதிப்பவர்கள் எல்லாம் ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலே இரட்சிக்கப்பட முடியும் என்று போதிக்கிறார்கள்.

நிச்சயமாகவே, நம்முடைய கர்த்தர் கட்டளையிட்டபடியே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இல்லையென்றால், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவோம் (2 தெச. 1 : 10).

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவோம். ●

## எபிரெயர் கால அட்டவணை

| | *எபிரெயம்* | *ஆங்கிலம்* |
|---|---|---|
| 1. | ஆபிப் (நிசான்) | மார்ச்-ஏப்ரல் |
| 2. | சீன் | ஏப்ரல்-மே |
| 3. | சீவான் | மே-ஜுன் |
| 4. | தம்ஊஸ் | ஜுன்-ஜுலை |
| 5. | அப் | ஜுலை-ஆகஸ்ட் |
| 6. | ஏலூல் | ஆகஸ்ட்-செப்டம்பர் |
| 7. | ஏதானிம் | செப்டம்பர்-அக்டோபர் |
| 8. | பூல் | அக்டோபர்-நவம்பர் |
| 9. | கிஸ்லேவ் | நவம்பர்-டிசம்பர் |
| 10. | தோபேத் | டிசம்பர்-ஜனவரி |
| 11. | செபாத் | ஜனவரி-பிப்ரவரி |
| 12. | ஆதார் | பிப்ரவரி-மார்ச் |

# கர்த்தருடைய சேனை

*Bro. L.E. Cranford*

**வே**த வகுப்புகளிலும், விடுமுறை வேதாகமப் பள்ளியிலும், சிறு குழந்தைகள் **நான் கர்த்தருடைய சேனையில் இருக்கிறேன்** என்று பாட நம்மில் அநேகர் கேட்டிருக்கிறோம். அவர்களில் பெரும்பாலானோருக்கு அந்தப் பாடலின் பொருள் தெரியாது என்று எண்ணுகிறேன். கிறிஸ்தவர்களாயிருக்கிற அநேக பெரியவர்களுக்கும், நடுத்தர வயதினருக்கும் கூட கர்த்தருடைய சேனை என்பதற்கான பொருள் தெரியுமா என்று திட்டமாகச் சொல்ல முடியாது.

கர்த்தருக்கு ஒரு சேனை இருக்கிறது என்பதற்கான சில ஆதாரங்களைப் பின்வரும் வசனங்கள் கொடுக்கின்றன.

ரோமர் நிருபத்தின் ஆசிரியர் இவ்விதமாகச் சொல்கிறார். **இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால், அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்** (ரோமர் 13:12).

**ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்** (எபே. 6:13).

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதும்போது, **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி** என்று எழுதுகிறார் (2 தீமோ. 2:3).

**தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதி கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்** (2 தீமோ. 2 : 4).

கிறிஸ்துவின் போர்ச் சேவகனாக ஒரு கிறிஸ்தவனின் சர்வாயுத வர்க்கம் இதோ: **சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டிகவர் களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதா னத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்னளாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்**

**கொண்டவர்களாயும் நில்லுங்கள்** (எபே. 6:1417).

கர்த்தருக்கு ஒரு சேனை உண்டு என்பதை ஒத்துக் கொண்டு ஒரு நாட்டிலுள்ள ராணுவத்தின் சில தன்மைகளைக் கவனிப்பது பிரயோஜனமாயிருக்கும்.

நான் இரண்டாம் உலகப் போரின் போது விமானப்படையில் பணியாற்றினேன். அதில் சேர்ந்த பிறகு, நான் விரும்பியபடி எதையும் செய்ய முடியவில்லை, நான் அவர்களுடன் இருந்ததினால் அவர்களுக்கு மகிழ்ச்சி தான் என்றும் அவர்கள் சொல்லவில்லை.

ராணுவ அதிகாரி என்னை ஒரு குறிப்பிட்ட பிரிவில் சேர்ந்தார். நான் செய்யும்படியாக சில பணிகள் எனக்குக் கொடுக்கப்பட்டது. எனக்கு மேலாக சில குறிப்பிட்ட அதிகாரிகள் இருந்தார்கள். சில விமானங்களை வரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கு நான் ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டிருந்தேன். நான் சரியான நேரத்தில் அந்த இடத்தில் இருப்பது முற்றிலும் அவசியமாகக் காணப்பட்டது. அங்கே ஆஜராகாமலிருப்பதற்கு எந்த ஒரு சாக்குபோக்கும் ஏற்றுக் கொள்ளப்படாது. **எனக்கு வேறு வேலை இருந்தது என்றோ, என்னால் எழுந்திருக்க முடியவில்லை** என்றோ யாரும் சொல்லத் துணியவில்லை.

எங்கள் பயிற்சி முடிந்தவுடன், மறுபடியும் சில குறிப்பிட்ட பணி ஸதலங்களுக்குச் செல்ல நாங்கள் பணிக்கப்பட்டோம். அங்கே நாங்கள் செய்யும்படியாக வேலை நிச்சயமாகக் கொடுக்கப்பட்டது.

ஒரு வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அதில் பங்கேற்கிறவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கப்படும். ஒவ்வொருவரும் அவரவர் இடத்தையும், பொறுப்பையும் அறிந்திருந்தார்கள். வேலையை முடித்து விட்டு திரும்புபவர்கள் தாங்கள் பணி செய்த விதம் பற்றிச் சொல்ல வேண்டும். இது தான் ராணுவத்தின் முறை.

சபை கர்த்தருடைய சேனையாக இருக்கிறபடியால் இந்த இரு அமைப்புகளிலும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்தால் பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

சில சபைகள் மற்ற சபைகளை விட ஆளுகை அமைப்பில் சிறந்து விளங்கும். இது நமக்கு புதிய செய்தி அல்ல. ஆயினும், புதிதாக சபைக்கு வருபவர்களுக்கு குறிப்பிட்ட வாரங்கள் பயிற்சி கொடுக்கும் சபையை எனக்குத் தெரியாது; அது போல அதன் அங்கத்தினர்கள் எப்போதும் எங்கே இருக்கிறார்கள் என்பதை அறியும் அல்லது ஒவ்வொரு கூட்டத்திலும் அதில்

பணிபுரியும் எல்லோரையும் வரக் கட்டளையிடும் சபையும் எனக்குத் தெரியாது.

சில சபைகளில் ஞாயிறு காலை ஆராதனையை நடத்துபவர்கள் ஆராதனை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஜெபத்திற்கு கூடுவதை நான் அறிவேன். ஆனால், செய்த பணியைக் குறித்து விவரிக்கக் கூடிய சூழ்நிலையை அவர்களிடத்தில் நான் பார்த்த அனுபவமில்லை அல்லது அப்படிச் செய்கிற வேறு சபையைப் பற்றி எனக்குத் தெரியாது.

பொதுவாக ராணுவத்தில், ஒவ்வொரு வீரருக்கும் ஒரு பிரிவின் கீழ் செய்யும்படியாக வேலை கொடுக்கப்படும். ஒவ்வொருவரும் தங்கள் வேலையை அறிவார்கள். அது போலவே கர்த்தருடைய சேனையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் செய்யும்படியாக வேலை கொடுக்கப்பட வேண்டும். சபையின் அங்கத்தினர்கள் (கர்த்தருடைய சேனை) கர்த்தருடைய நாளில் அவர்களுடைய சௌகரியம் போல் சபை கூடி வந்தாலோ அல்லது சபை கூடி வருதலை விட்டு விட்டாலோ அதற்குண்டான விளைவுகள் இல்லையென்றால் ஏதோ தவறு நடக்கிறது.

அநேக ஞாற்றுக்கிழமைகளில் ஆராதனையை தவறவிட்ட அங்கத்தினர்களை நான் அறிவேன். அவர்கள் திரும்பி வந்த போது **நாங்கள் உங்களை காணத் தவறிவிட்டோம், நீங்கள் திரும்பி வந்ததினால் மகிழ்ச்சி அடைகிறோம் என்று வாழ்த்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நடத்தைகள் ராணுவத்தில் பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. அதுபோல ஒரு நாளில் கர்த்தர் நம் சாக்குப் போக்குகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்**. ராணுவத்தில் ஒன்று கூடுவதற்கு தவறினால் அது எந்த வகையிலும் **ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது!**. அது போல கர்த்தருடைய சபை ஆராதனை என்பது கர்த்தருடைய சேனை என்பதை அறிந்து எல்லாவகையிலும் அதற்கேற்றாற்போல சபையாகக் கூடிவர வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமக்கு எல்லாவகையிலும் அவசியமாயிருக்கிறது. ●

---

## இயேசுவைக் காண ஆவலாயிருந்து கண்டவர்கள்

- ✶ சிமியோன் (லூக்கா 2 : 32).
- ✶ பெத்லகேம் மேய்ப்பர்கள் (லூக்கா 2 : 20)
- ✶ ஆயக்காரன் சகேயு (லூக்கா 19 : 8)
- ✶ ஏரோது (லூக்கா 23 : 8)
- ✶ சாஸ்திரிகள் (மத் 2 : 11)